**நவம்பர் - 3**

**"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான்; மாம்சமோ பெலவீனமுள்ளது." - மத் 26 . 41.**

சிலர் விழித்திராதபடி ஜெபம் செய்கிற தவறை செய்கிறார்கள். மற்றவர்கள், ஜெபம் செய்யாதபடி விழித்திருக்கிற தவறை செய்கிறார்கள். ஆனால், நமது கர்த்தர் கற்பித்த பத்திரமானதும்,தகுதியானதுமான ஒரே வழி யாதெனில், இரண்டையும் ஒன்று சேர்த்து செய்வது. கர்த்தரின் வசனத்தின் மூலமாகக் கிடைக்கிற எல்லா உற்சாகப்படுத்தும் செய்திக்கும், அவைகளின் நிறைவேறுதலின் சான்றிற்காகவும், அவர் வந்திருக்கிறதை முன் கூட்டியே தெரிவித்திருக்கிற அடையாளங்களுக்காகவும், நேகமங்களின் பெரிய மாறுதல்கள் இப்பொழுதே அருகிலிருப்பதற்காகவும், நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். நம்மை விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், எஜமான் பக்தியிலும், அன்பிலும், பெலப்படுத்துகிற எல்லாவற்றுக்காகவும் நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். விழிப்புள்ளவர்களாயிருக்கும் போது இடைவிடாமல் ஜெபம் செய்கிறவர்களாய் இருக்க வேண்டும். கர்த்தருடைய ஜனங்களாக நாம் சேர்ந்து ஜெபம் செய்கிறவர்களாயிருக்கிறோம். குடும்பமாக நாம் நமது வீடுகளில் ஜெபம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் இரகசியமாக, தனிமையாக ஜெபம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். **- Z 01, 80 (R 2773).**

விழிப்புள்ள நிலை, நமது எண்ணங்கள், குணங்கள், உத்தேசங்கள், வார்த்தைகள், கிரியைகள், சுற்றிலுமுள்ளவைகள், நம்மேல் செலுத்தும் செல்வாக்குகள் ஆகிய இவைகளை ஆராய்கிறது. நல்ல காரியங்களுக்காக தேவனண்டைக்குப் போகிறதும், சொல்லப்பட்டதும், சொல்லப்படாததுமான இருதயத்தின் கபடமற்ற விருப்பமே ஜெபம். முந்தினது நம்மை சுறுசுறுப்புடன் கூடிய செயலுக்குத்தூண்ட எல்லா அறிவையும், சக்தியையும் நமக்குக் கொடுக்கிறது. பிந்தினது கர்த்தர் நமக்கு ஈகிற ஆசிர்வாதங்களை அடைவதில் கொண்டுள்ள நம்முடைய சுறுசுறுப்புடன் கூடிய செயலுக்கு உதவ தேவனுடைய வசனத்திலிருந்து எல்லா வெளிச்சத்தையும், சக்தியையும் தெய்வீக பராமரிப்பிலிருந்து சந்தர்ப்ப நிலைகளையும் மற்ற உதவிகளையும் கொடுக்கிறது. இப்படிப்பட்ட விழித்திருத்தலும் ஜெபமும் சோதனையிலிருந்தும் சோதனையின் மத்தியிலும் நம்மை விடுவித்து, தேவனின் மகிமைக்கென்று பெலவீனமான மாம்சத்தை ஜெயிக்க இஷ்டமுள்ள ஆவியை சாத்தியமாக்கிறது. **- P 32, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 26.38-40, 42-46; மாற் 13.33; 1கொரி 16.13; எபே 6.18; 1பேது 5.8,9; எபி 3.12,13; ஏசா 26.8,9; ரோம 7.18-25, 8.3; 1கொரி 9.27; கலா 5.16,17,24; பிலி 2.12,13, 3.12-14.**

**கோபுர வாசிப்பு : Z 13, 279 (R 5312).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் விழித்திருந்து ஜெபித்தேனா? எப்படி? ஏன்? பலாபலன் என்ன?**